# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • பிப்ரவரி 27, 2021 Weekly E-paper • February 27, 2021





# ஏன் இவ்வளவு அவசரம்?

மா.உமாபதி

## ராமேஸ்வரம் கோவிலுக்குள் சங்கராச்சாரி கும்பலின் ரவுடியிசம்

இரா.உமா

## யாகாவாராயினும் நாகாக்க!

தலையங்கம்

## தோழர் கொளத்தூர் மணி நேர்காணல்

மா.உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • பிப்ரவரி 27, 2021 Weekly E-paper • February 27, 2021


# ஏன் இவ்வளவு அவசரம்?

மா.உமாபதி

இந்தியத் தேர்தல் ஆணையம், ஆர்.எஸ்.எஸ். சோதிடர்களைக் கலந்து ஆலோசித்து மாசி மாதம் பவுர்ணமி நாளில் வெள்ளிக்கிழமை சுபயோக சுபதினத்தில் தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளம், அசாம், மேற்கு வங்கம் ஆகிய 5 மாநிலங்களில் தேர்தல் தேதிகளை அறிவித்துள்ளது . அறிவிப்பு வெளியான 14 நாள்களில் மார்ச் 12ஆம் நாள் வேட்புமனுத் தாக்கல் தொடக்கம். ஒரு வாரத்தில் மார்ச் 19 இல் வேட்புமனுத் தாக்கல் நிறைவு. மார்ச் 20 வேட்புமனுப் பரிசீலனை. மார்ச் 22 வேட்புமனுத் திரும்பப் பெறக் கடைசி நாள். அதன்பின் 15 நாள்களில் ஏப்ரல் 6ஆம் நாள் வாக்குப்பதிவு. வேகவேகமாக வாக்குப்பதிவு நடத்தியபின் பதிவான வாக்குகளை எண்ணுவதற்கு 28 நாள்கள் சற்றேறக்குறைய ஒரு மாதம் காத்திருக்க வேண்டும்.

தமிழ்நாடு புதுவை கேரளாவில் ஒரே நாளில் வாக்குப்பதிவு அசாமில் இரண்டு கட்டமாகவும் மேற்கு வங்கத்தில் எட்டு கட்டமாகவும் வாக்குப்பதிவு நடைபெறும் என்கிறார்கள் . தமிழ்நாடு அரசியல் கட்சிகள் அனைத்தும் தேர்தல் ஆணையத்திடம் வைத்த கோரிக்கைகள்மூன்று. ஒன்று தேர்தலை பல கட்டங்களாக நடத்தாமல் ஒரே நாளில் வாக்குப்பதிவு நடத்த வேண்டும் என்பது. இந்தக் கோரிக்கையைத் தேர்தல் ஆணையம் ஏற்றுக் கொண்டது. ஆனால் வாக்குப்பதிவு ஏப்ரல் மூன்றாம் வாரத்திலும் வாக்கு எண்ணிக்கையை நான்காம் வாரத்திலும் நடத்த வைக்கப்பட்டக் கோரிக்கை காற்றில் பறக்க விடப்பட்டுள்ளது

வேட்பாளர்கள் இறுதி செய்யப்பட்டபின் 15 நாள்கள்தான் பரப்புரைக்கான அவகாசம். மக்களைச் சந்தித்துப் பரப்புரை செய்து அவர்களைச் சிந்திக்க வைத்து வாக்களிக்க வைக்க மத்திய மாநில ஆளும் கட்சிகளிடம் எந்தச் சரக்கும் இல்லை. அவர்களிடம் உள்ள ஒரே ஆயுதம் "சொக்கப்பன்"தான். சொக்கப்பனை வினியோகம் செய்தால் போதும் என்று அவர்கள் கருதுகிறார்கள். அதற்கு அவர்களுக்கு ஒரே ஒரு நாள் போதும். ஆனால் மத்திய மாநில அரசுகளின் ஆட்சிக் குறைபாடுகளை, கேடுகளை மக்களிடம் எடுத்துச் செல்ல, அந்தக் குறைகளை எல்லாம் எவ்வாறுக் களையப் போகிறோம், என்னென்ன நல்வாழ்வுத் திட்டங்களை நடத்த இருக்கிறோம் என்பன போன்ற ஏராளமானத் தகவல்கள் எதிர்க்கட்சிகளிடம் உள்ளன. அவற்றை முழுமையாக மக்களிடம் கொண்டு செல்ல விடாமல் தடுக்கும் விதத்தில் பரப்புரைக்கான கால அவகாசத்தை மிகவும் குறைத்துள்ளார்கள். வாக்களித்த பின் ஒரு மாதம் எந்தப் பணியும் இல்லாமல் காத்திருக்க வேண்டி உள்ளது. இது மக்களையும் அரசியல் கட்சிகளையும் எப்போதும் உச்சகட்டப் பதட்டத்தில் வைத்திருக்கும் நாசிகளின் வேலையை இந்தியத் தேர்தல் ஆணையம் செய்துள்ளது.

வாக்களித்துவிட்டு காத்திருக்கும் ஒரு மாத காலத்தில் எதுவும் நடக்கலாம். மனசாட்சி, மனிதநேயம், அறிவு நாணயம் எதுவும் இல்லாத மோடியின்




ஆட்சியில் எதுவும் நடக்கலாம். கடந்த 2016 தேர்தலில் வாக்கு எண்ணிக்கை முற்றுப்பெறாத நிலையில், திமுக, அதிமுக இரண்டுக்கும் இடையில் போட்டி கடுமையாக இருந்த நேரத்தில் காலை 10:30 மணிக்கு எல்லாம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அதிமுக வெற்றி பெற்றதாகவும் அதற்காக வாழ்த்தினை செல்வி ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவித்தார். பிரதமர் தன்னுடைய விருப்பத்தை இதன்மூலம் தெரிவித்தபின்தான் பல்வேறு இடங்களில் வாக்கு எண்ணிக்கையில் குளறுபடிகள் நடைபெற்றன. குறிப்பாகவும் சிறப்பாகவும் ராதாபுரம் தொகுதியில் உண்மையில் திமுக வேட்பாளர் அப்பாவு அவர்கள் வெற்றி பெற்றிருந்தாலும் தபால் வாக்குகளைக் கணக்கில் கொள்ளாமல் அதிமுக வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவித்தார்கள்.

எதிர்க்கட்சிகளைச் செயல்பட விடாமல் தடுத்து ஆளும் கட்சிகளுக்குச் சாதகமான போக்கினைத் தேர்தல் ஆணையம் கொண்டிருக்கிறது. ஜனநாயகத்தின் குரல்வளை நசுக்கப்படுகிறது.

ஆனால் இவற்றையெல்லாம் தேர்தல் காலத்தில் மட்டும் மக்களைச் சந்திக்கின்ற கட்சிகளுக்குத்தான் இடையூறுகளும், இடர்பாடுகளும். ஆனால் எப்போதும் மக்களோடு இருந்து தொண்டாற்றி வருகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அதன் தலைவர் தளபதி அவர்களுக்கும் இவை எல்லாம் ஒரு பொருட்டே அல்ல.

"தடைகள் உண்டெனில் தடம் தோள்கள் உண்டு " என்று மார்தட்டும் திராவிட முன்னேற்றக் கழகம் வருகின்ற தேர்தலில் வெற்றிக்கொடி நாட்டும். எடப்பாடி பழனிச்சாமியால் வீழ்ந்துவிட்ட தமிழ்நாட்டின் வளர்ச்சி தளபதியால் சீர்படும்.

# ராமேஸ்வரம் கோவிலுக்குள் சங்கராச்சாரி கும்பலின் ரவுடியிசம்

இரா.உமா

ராமேஸ்வரத்தில் உள்ள ராமநாதசுவாமி கோவிலுக்குச் சென்ற காஞ்சி சங்கரன் விஜயேந்திரனும், அவருடன் சென்ற ”ஹைகோர்ட்” எச்.ராஜா, அரசியல் தரகர் குருமூர்த்தி உள்ளிட்ட கும்பலும் அடாவடித்தனத்தில் ஈடுபட்டுள்ளனர். கோவில் கருவறைக்குள் சென்று காஞ்சி சங்கரன் விஜயேந்திரன் பூஜை செய்ய முயற்சி செய்துள்ளார். அந்தக்கோவிலின் சிவ ஆகமவிதி அதற்கு அனுமதிக்கவில்லை என்று கூறி அங்கிருந்த குருக்கள் தடுத்துள்ளனர். உடனே ”ஹைகோர்ட்” எச்.ராஜாவும், அரசியல் புரோக்கர் குருமூர்த்தியும் தகராறு செய்து, அறநிலையத் துறை அதிகாரிகளை மிரட்டி விஜயேந்திரனைக் கருவறைக்குள் போய்ப் பூஜை செய்ய வைத்துள்ளனர். ஏற்கனவே சுந்தர்ராமன் கொலையில் சிறைக்குச் சென்ற சங்கரன் ஜெயேந்திரனுக்கு இதே கோவிலில் அனுமதி மறுக்கப்பட்டது தெரிந்தும், மறுபடியும் இந்தக் கும்பல் ரவுடியிசம் செய்து இதைச் சாதித்துள்ளது.

அனைவரும் அர்ச்சகராகலாம் என்று தலைவர் கலைஞர் சட்டம் கொண்டுவந்து செயல்படுத்திய போது...ஆகமம் அனுமதிக்காது என்று புழுகி நீதிமன்றம் சென்ற கூட்டம், சிதம்பரம் நடராஜர் கோவிலில் தமிழில் தேவாரம் பாடிய பெரியவர் ஆறுமுகசாமியைத் தூக்கி வெளியில் வீசி எறிந்த கூட்டம்தான், இப்போது உண்மையிலேயே ஆகமத்தில் சொல்லியிருப்பதை மீறியுள்ளது.... அதாவது அவர்கள் மொழியில் சொல்வதென்றால் ராமநாத



சுவாமிக் கோவில் தீட்டுப்பட்டுவிட்டது.... அப்படியென்றால் தீட்டுக்கழிக்க வேண்டுமா இல்லையா? என்ன செய்யப்போகிறார்கள் சைவம் காப்பவர்கள்?

சரி போகட்டும்...இதை சத்தியவேல் முருகனார் போன்ற சைவப் பெரியவர்கள் பார்த்துக்கொள்ளட்டும்.

ஆனால் இதுவன்று மையச் சிக்கல்....

ராமேசுவரம் கோவில் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கிருந்த அரசு அதிகாரிகளை சங்கரனுடன் சென்ற எச்.ராஜா, குருமூர்த்தி என்ற இரண்டு பார்ப்பனர்கள் மிரட்டி காரியத்தைச் சாதித்துள்ளனர். அப்போது அங்கு வந்த அதிமுக அமைச்சர் ஓ.எஸ்.மணியனும் அதிகாரிகளை அந்தக் கூட்டத்தோடு ஒத்துப்போகச் சொல்லியிருக்கிறார். இன்று ராமேசுவரம் கோவிலில் ரவுடித்தனம் செய்து தங்கள் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநாட்டியதைப் போல, தமிழ்நாடு முழுவதுமுள்ள கோவில்களிலும் செய்யப் பார்க்கிறார்கள். நூறாண்டுகளுக்கு முன்பிருந்ததைப் போல அனைத்துக் கோவில்களையும் அக்ரகாரத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் பார்ப்பனக் கூட்டம் தொடர்ந்து முயற்சி செய்கிறது. இது போன்ற சிறு தடைகூட இல்லாமல் எல்லாக் கோவில்களிலும் தாங்கள் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பதற்காகத்தான், இந்து சமய அறநிலையத் துறையைக் கலைத்துவிடச் சொல்கிறது பார்ப்பனக் கும்பல். இந்துக் கோவில்களை இந்துக்களிடம் ஒப்படைக்கச் சொல்லும் இந்த “பஜனை கோஷத்தின்” பொருள் அக்ரகாரத்திடம் ஒப்படையுங்கள் என்பதுதான். அறநிலையத் துறை மட்டும் இல்லையென்றால் இன்று ராமேசுவரம் கோவிலில் நடந்தது அனைத்துக் கோவில்களிலும் நடக்கும்.

இந்தக் கோவிலில், சிருங்கேரி மடத்தில் ஆகம தீட்சை பெற்ற மகாராஷ்டிரா பார்ப்பனர்கள்தான் பூஜை செய்ய வேண்டும் என விதி இருக்கிறதாம். இது மாநிலங்கள் பிரிக்கப்படாத காலத்தில் ஏற்படுத்தப்பட்ட விதியாக இருக்கலாம். இப்போது தமிழ்நாடு அரசின் அறநிலையத் துறைக்குக் கீழ் வந்துவிட்டபின் தமிழர்களுக்கே பூஜை வேலை தருவதுதான் சரி. ஆகமம் பயின்ற இருநூறுக்கும் மேற்பட்ட நம்முடைய இளைஞர்கள் இதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களைப் போல முறைப்படி ஆகமக்கல்லூரியில் சேர்ந்து படித்துச் சான்றிதழ் பெற்றால் காஞ்சி சங்கரன் விஜயேந்திரன் கூட இந்த வேலைக்குத் தகுதி பெற்றுவிடுவார்தானே... பிறகு யார் தடுக்கப் போகிறார்கள்? அப்படித் தடுப்பது சட்டப்படித் தவறாகிவிடுமே...

தமிழ்நாட்டின் கோவில்களைப் பார்ப்பனர்கள் கைப்பற்றப் போடும் சதித்திட்டமே... “அறநிலையத் துறை வேண்டாம்.. இந்துக்களிடம் கோவில்களை ஒப்படையுங்கள்” என்ற விசப்பிரச்சாரம்... சங்கரனைக் கருவறைக்குள் விடச்சொல்லி தகராறு செய்த எச்.ராஜாவும் குருமூர்த்தியும் ஒரு நாடார் இந்துவையோ, முதலியார் இந்துவையோ, செட்டியார் இந்துவையோ கருவறைக்குள் விட்டால் அமைதியாக இருப்பார்களா? மாட்டார்கள். ஏனெனில் கோவில் கருவறை மீதான அவர்களின் ஆதிக்கமே, இந்த இந்திய நாட்டின் சமூக அரசியல் ஆதிக்கத்தின் அடித்தளமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். அந்த அடித்தளத்தை அசைத்து அடித்து நொறுக்குவதே அனைத்து மக்களுக்குமான சமூக நீதி அரசியலை வலுவாக நிலைநாட்டுவதற்கான வழி என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

ராமேசுவரம் கோவிலில் ரவுடியிசம் செய்த இந்தக் கும்பலின் ஆதிக்கத்தைத் தமிழ்நாட்டின் அனைத்துக் கோவில்களில் இருந்தும் துடைத்தெறிய வேண்டும். இந்து சமய அறநிலையத் துறையை மேலும் வலுவாக்க வேண்டும்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## யாகாவாராயினும் நாகாக்க!

பிரதமர் நரேந்திர மோடி எப்பொழுதெல்லாம் தமிழ்கத்திற்கு வருகிறாரோ அப்பொழுதெல்லம் மேடையில் தமிழ் இலக்கியப் பாடல் வரிகளை ஒப்புவிக்கத் தவறுவதில்லை.

திருவள்ளுவரையும் அவ்வையாரையும் மேற்கோள் காட்டிப் பேசும் மோடி தமிழ்மொழி உலகத்திலேயே மிகச்சிறந்த மொழி என்றும், அது பாரம்பரியமிக்க மொழி என்றும் சொல்லி நம்மை உச்சந்தலை குளிர வைக்க முயற்சி செய்கிறார்.

ஆனால், தமிழகத்தில் சி.பி.எஸ்.இ பள்ளிகளில் தமிழ் மொழியை ஒழித்துக் கட்டிவிட்டுத் தமிழாசிரியர் ஒருவர்கூட இல்லாமல் செய்துவிடுகிறார். தமிழ்நாட்டில் இந்தியை, சமஸ்கிருதத்தைத் திணிப்பதற்காக அவர் எடுத்துக்கொள்ளும் முயற்சியை நாம் ஒரு அத்துமீறல் என்றே சொல்லலாம்.

இது ஒருபுறம் இருக்க அண்மையில் புதுச்சேரிக்கு வந்த மோடி தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது வன்முறை தலைவிரித்து ஆடியதாகவும், அதனால் தமிழகம் மிகவும் பின்தங்கிப் போயிருப்பதாகவும் நாக்கூசாமல் சொல்லியிருக்கிறார்.

2002-ஆம் ஆண்டு குஜராத்தில் நடந்த படுகொலைகளை மறந்துவிட்டாரா மோடி?

பாஜக ஆளும் உத்திரப்பிரதேசத்தில் நடைபெறும் பாலியல் வன்கொடுமைகளால் நிகழும் படுகொலைகளை மறந்துவிட்டாரா மோடி? மாட்டுக்கறி வைத்திருந்ததாகச் சொல்லி அடித்துகொல்லும் கலாச்சாரமும், அதேபோல் ஜெய்ஸ்ரீ ராம் ஜெய் அனுமான் என்று சொல்லச் சொல்லித் துன்புறுத்தும் கலாச்சாரமும் தமிழ்நாட்டில் இல்லை. அது பாஜக ஆளும் மாநிலங்களில்தான் இருக்கிறது என்பதை மறந்துவிட்டாரா மோடி?

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது வளர்ந்த கல்வியும், சுகாதாரமும், தொழில்துறையும் பட்டியல் இட்டால் நீண்டுகொண்டே போகும். இந்த வளர்ச்சி பாஜக ஆளும் மாநிலங்களில் இருக்கிறது என்று சொல்ல முடியுமா மோடியால்?

இதையெல்லாம் ஒரு பிரதமராகப் பார்க்காமல் மூன்றாந்தர அரசியல்வாதியைப் போல் தி.மு.கழக ஆட்சியைக் குறைகூறுவதற்கு எந்தத் தகுதியும் மோடிக்கு இல்லை.

மோடியின் பேச்சு வன்மையானக் கண்டனத்திற்கு உரியது.




## படிப்பு வட்டம் தொடக்க விழா

22-02-2021 அன்று சென்னை இராயப்பேட்டை இந்திய அலுவலர் சங்கக் கட்டிடத்தில் நடைபெற்ற "இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் தொடக்க விழா" மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசாவின் "நேரு சிந்தனை- இலக்கும் ஏளனமும்" நூல் அறிமுக விழாவில் பீட்டர் அல்போன்ஸ், ஆ.இராசா, சுப.வீரபாண்டியன், பேராசிரியர் அன்பழகனாரின் மகள் செந்தாமரை, மருத்துவர் சொக்கலிங்கம், பெல்.ராஜன், சிற்பி செல்வராஜ், மகாலட்சுமி, ஜனனி, ராஜ்ஸ்ரீ, சந்திரசேகர் உள்ளிட்ட தோழர்கள் கலந்துகொண்டனர்.

## தோழர் தா.பாண்டியன் மறைவு

26-02-2021 அன்று உடல்நலம் குன்றிய நிலையில் இயற்கையடைந்தார் தோழர் தா.பாண்டியன் அவர்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவராகவும், சிறந்த பகுத்தறிவு வாதியாகவும், ஏற்றுக்கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்தார். நாடாளுமன்ற உறுப்பினராகவும், மக்கள் மன்றத்திலும் அவர் ஆறிய சேவை அளப்பரியது. அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவர் சார்ந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு எங்கள் இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**-சுப.வீரபாண்டியன்**
பொதுச்செயலாளர்,
திராவிட இயக்கத் தமிழர் பேரவை.



ஆசிரியர்: **சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்: **எழில். இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி**
**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com, www.karunchattaibooks.com**
மின் அஞ்சல்: **karunchattai@gmail.com**
டுவிட்டர்: **suba_vee**
தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408**

# திமுக எதிர்ப்பே சீமானின் அரசியல்!

## திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர்

## தோழர் கொளத்தூர் மணி நேர்காணல்

**1. பாமக, வன்னியர்களுக்கெனத் தனியாக 20% இடஒதுக்கீடு கேட்கின்றது. இன்னொரு பக்கம் அண்மையில் தேவேந்திரகுல வேளாளர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, பட்டியல் இனத்தில் இருந்து தங்களை வெளியே கொண்டுவர வேண்டும் என்று புதிய தமிழகம் கேட்கின்றது. இந்த இரண்டு கோரிக்கைகளையும் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் தங்களுக்கென்று தனியான இடம் வேண்டும் என்று பாமக கோரிக்கை வைத்திருக்கிறது. ஏற்கனவே பிற்படுத்தப்பட்டோரிலிருந்து மிகவும் பிற்படுத்தப்பட்டோர் எனப் பிரித்தார்கள். அதற்கான அடிப்படைக் காரணங்கள் சில இருந்தன. 1954ஆம் ஆண்டு காமராஜரிடம், திருவான்மியூரில் நடந்த மாநாட்டில் அந்தக் கோரிக்கையை வைக்கிறார்கள். "நாங்கள் வாழ்நிலையில் தலித்துகள் போலத்தான் இருக்கிறோம். ஆனால் சமூக நிலையில் மட்டும் தீண்டாமைக்கு உள்ளாகாமல் இருக்கிறோம்." அதன் அடிப்படையில்தான் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் என்று ஆக்கப்பட்டது. பிரித்துக்காட்டுவதற்கு ஒரு அடையாளம் இருந்தது. இப்போதும்கூடத் தாழ்த்தப் பட்டோருக்கான இடஒதுக்கீட்டில் அருந்ததியர்களுக்கு உள்ஒதுக்கீடு காட்ட முடிந்தது. அவர்கள் தீண்டாமைக்கு உள்ளான சமூகமாக இருந்தாலும் மற்ற அம்சங்கள் பொருந்தி இருந்தாலும் மலம் அள்ளுவதும், தோல் வேலை செய்வதும் என்ற தனித்த அடையாளம் அவர்களுக்கு இருந்தது. ஆனால் வன்னியர்களை அப்படி மிகவும் பிற்படுத்தப்பட்டோரிலிருந்து தனித்துக் காட்டுவதற்கு எந்த ஒரு அடையாளமும் இல்லை. தங்களுடைய செல்வாக்கை நிரூபிப்பதற்காகவும், தேர்தல் நேரத்தையும் பயன்படுத்தி வைக்கப்படும் கோரிக்கையாகத்தான் இது இருக்கிறதே தவிர, அவர்களுடைய எண்ணிக்கை, வாழ்க்கை நிலை பற்றிய எந்த ஒரு ஆய்வறிக்கையும் இல்லை. எப்போதும் தமிழ்நாட்டில் கலைஞர் ஆட்சியில் இடஒதுக்கீடு மாற்றம் செய்யப்படும் போதெல்லாம் ஒரு குழு அமைத்து ஒரு ஆய்வறிக்கை சமர்ப்பித்துத்தான் இடஒதுக்கீடு மாற்றம் கொண்டுவரப்பட்டது. அவசரத்தில் வைக்கப்பட்டச் செய்திகளை மட்டும் வைத்துக்கொண்டு கொண்டு வரப்படுவது ஏற்புடையதாக இல்லை என்பது எனது கருத்து. இன்றைக்கு இருக்கிற பிற்படுத்தப்பட்டச் சமுதாயங்களில் இதுவரை எந்தவித உயர்பதவிகளுக்கும் செல்லாதவர்கள் - சலவைத் தொழிலாளர்கள், மண்பாண்டத் தொழிலாளர்கள் - ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எண்ணிக்கை பலமும் இல்லை எந்த செல்வாக்கும் இல்லை. அவர்கள் குறித்துத் தனி இடஒதுக்கீடு கேட்டால்கூடப் பொருள் இருக்க முடியும்.



தேவேந்திரகுல வேளாளர் என்று இப்போது பெயர் வைத்திருப்பதற்கு பெரிய ஆர்ப்பாட்டமாக, ஒரு சாதனை போலக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். எல்லா ஜாதிகளும் பல காலங்களில் பல பெயர்களில் மாறி மாறி வந்திருக்கின்றன. அது ஒரு பெரிய சாதனை என்று சொல்லிவிட முடியாது. ஆனால் தங்களைப் பட்டியலில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று கேட்பது குறிப்பிட்ட ஒரு கூட்டம்தான். பொது வெளியிலும், கட்சி அரசியலும் பங்கேற்பவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எங்கோ கிராமங்களில், உட்கிராமங்களில் ஒடுக்குமுறையைச் சந்தித்துக் கொண்டிருக்கிறப் பெருங்கூட்டத்தின் கருத்தாக இதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதையும் ஜாதி மக்களைத் தூண்டிவிட்டுத் தங்கள் தலைமையை ஏற்க வைப்பதற்கான முயற்சியாகத்தான் பார்க்கிறேன்.

**2. அண்மைக் காலங்களில் தமிழ் முறையிலான திருமணங்கள் - தமிழில் மந்திரங்கள் ஓதுவது அகரம் அல்லது ழகரத்தில் தாலி கட்டுவது - என ஒரு கலாச்சாரத்தை நாம் தமிழர் போன்ற கட்சியினர் முன்னெடுக்கின்றனர். திராவிட இயக்கம் சுயமரியாதைத் திருமணத்தைக் கொண்டு வந்தது. இந்த திருமணமுறைகள் பற்றிய தங்கள் கருத்து.**

சுயமரியாதைத் திருமணம் என்பது ஒரு நாளில் ஒரு கட்டத்தில் வந்துவிட்டதல்ல. முதலில் நம்மை மதிக்காத பார்ப்பனர்களை அழைக்காதீர்கள் என்றும் புரியாத வடமொழியைப் பயன்படுத்தி நடத்தாதீர்கள் என்றும், அடுத்து அறிவுக்குப் புறம்பானச் சடங்குகளை விட்டொழிப்பதையும் பாலினச் சமத்துவத்தையும் சேர்த்து வலியுறுத்துவதுதான் சுயமரியாதைத் திருமணம். இந்தி எதிர்ப்புப் போரில் பெரியாரோடு தொடர்பில் இருந்த சைவத் தலைவர்கள் 1938ஆம் ஆண்டு ஒரு மாநாடு நடத்தினார்கள். அதிலேயே தமிழர் திருமணம் என்பதைச் சொன்னார்கள். பார்ப்பனர்களுக்குப் பதிலாக சைவர்கள் இருப்பார்கள் வடமொழிக்குப் பதிலாகத் தமிழ் இருக்கும். ஆனால் அறிவுக்குப் பொருந்தாத சடங்குகளைப் புறக்கணிப்பதாக அல்லது பாலினச் சமத்துவத்தைப் பேணுவதாக இருக்காது. தாலி என்பது பெண்ணுக்கு மட்டும் அணியப்படுகிறது. அது ஒரு அடிமைச் சின்னம் என்பதால்தான் அதைத் தவிர்க்க வேண்டும் என்று சொன்னோம்.எப்படி இந்துக்கள் என்று பார்ப்பனர்கள் தங்கள் நலனைப் பேசிக் கொண்டு இருக்கிறார்களோ, அப்படித்தான் சுயமரியாதைத் திருமணத்தை ஏற்க முடியாத சைவர்கள் தமிழர் திருமணமுறை என்று தங்கள் நலனைத் தமிழர் நலன் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அதுதான் இப்போது நடைபெறுவதாகப் பார்க்கிறேன். அறிவியல் பார்வையோடும், தன்மானப் பார்வையோடும், பாலினச் சமத்துவப் பார்வையோடும் பார்க்கும் போது இது போன்ற திருமண முறைகளும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதே என்னுடையக் கருத்து.

**3. இதுபோன்ற திருமணங்கள் பார்ப்பனியத்திற்கு ஆதரவாக அமையாதா?**

நிச்சயமாக அப்படித்தான் அமையும். சடங்குகள் இருக்க வேண்டும், சைவர்கள் இருக்கவேண்டும், சைவர் கிடைக்காதபோது பார்ப்பனர்களை அழைப்பார்கள். தமிழில் சொல்லப்படும் பாடல்கள் என்னவாக இருக்கும் என்று நமக்குத் தெரியாது. ஆனால் பொருள் புரியும். அப்போது அதை எதிர்ப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதனால் வடமொழியில் சொன்னால்தான் புரியாது என்று வடமொழிக்குச் செல்ல வாய்ப்பிருக்கிறது. ஒன்றை வைத்துக்கொண்டு அதோடு நின்றுவிடாமல் பெரியார் ஒவ்வொன்றாக மாற்றிக்கொண்டு அடுத்த கட்டத்திற்கு நடந்து கொண்டே இருந்தார். ஆனால் இது அப்படி இல்லாமல்

தொடர்ச்சி அடுத்த பக்கம்

**முன்பக்கத் தொடர்ச்சி**

பின்னோக்கிப் போகிறது. இன்னும் கொஞ்சம் பின்னோக்கிப் போவதற்கு அதிக காலம் ஆகாது. இது மிக மோசமாக, தமிழர்கள் பார்ப்பனர்களுக்கு அடிமையாய் இருந்த காலகட்டத்திற்குத் தான் இட்டுச்செல்லும்.

**4. திராவிடக் கருத்தியலையும் திராவிட இயக்கங்களையும் தொடர்ந்து தாக்கி வந்த திரு.சீமான், ஜெயலலிதாவின் பிறந்தநாள் அன்று சசிகலா அவர்களைச் சந்தித்திருக்கின்றார். இந்தச் சந்திப்பை எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

அதிமுகவை நாம் திராவிடக் கட்சி அல்ல என்று சொல்வதைப்போல சீமான் வேறு ஒரு கோணத்தில் பார்த்து அதிமுகவை விமர்சிப்பது கிடையாது. திமுகவை மட்டும்தான் அவர் எப்போதும் தாக்கியிருக்கிறார். மாநில உரிமைகள் பறிபோவது பற்றிப் பேசும்போது, உண்மையான தமிழ்த் தேசியவாதியாக இருப்பாரானால், அதிமுகவையும் பாசிசப் போக்குடைய பாஜகவையும் கண்டிப்பதைத்தான் அவர் முதன்மை அரசியலாகக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவரிடம் இருப்பது திமுக எதிர்ப்பு மட்டும்தான். அதற்கு அடிப்படையில் வேறு காரணங்கள் இருக்கலாம், வேறு இலாபங்கள் இருக்கலாம். அதை எல்லாம் சேர்த்து வைத்துத்தான் நாம் பார்க்க வேண்டும். இப்போது போயிருக்கிறார். "இதிலிருந்து தனக்கு ஏதேனும் ஆதாயம் இருக்குமா?" என்பதற்கு மேல் அவருடைய சிந்தனைகள் இருக்காது என்று நான் கருதுகிறேன். பாவம் தமிழர்கள்!

**5. தங்களைப் பொதுவானவர்களாகக் காட்டிக் கொள்ளும் சகாயம் ஐஏஎஸ் போன்றவர்கள் 'ஊழலை ஒழிப்போம்' என்னும் பொதுவான முழக்கத்தை முன்வைத்து அரசியலுக்கு வருவதைப் பற்றியத் தங்களுடையக் கருத்து.**

மக்களிடம் அல்லது சமூகத்தில் நிலவுகிற கேடு என்பது ஊழல் மட்டுமே என்று சுருக்கிப் பார்ப்பவர்கள்தான் இந்தக் கூட்டத்தினர். கெஜ்ரிவால் தொடங்கித் தற்போது சகாயம் வரை. கெஜ்ரிவாலிடம் போய் இடஒதுக்கீடு பற்றிக் கருத்துக் கேட்டால் சொல்ல மறுப்பார். அணு உலை பற்றிக் கேட்டால் கூறமாட்டார். பின்னர் அதில் என்ன பயன் இருக்க முடியும்?

ஊழல் இல்லை என்பதை அரசு அதிகாரிகள் செய்யலாம். ஊழலற்ற நிர்வாகத்தை மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர் கொடுக்கலாம். ஆட்சிக்கு வந்துதான் கொடுக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் மக்களுடைய நிலை என்ன, என்ன பாதிப்புகளில் மக்கள் இருக்கின்றனர், எந்தெந்த உரிமைகள் அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்டிருக்கின்றன என்பது பற்றிய பார்வையும் அதற்கானத் தீர்வையும் வைத்திருப்பதை மட்டும்தான் அரசியலாகப் பார்க்க முடியுமே தவிர வெறும் ஊழல் ஒழிப்பு மட்டுமே அரசியல் ஆகிவிடாது. அது வேண்டுமானால் எல்லோராலும் வரவேற்கப்படும் ஒன்றாக இருக்கும். காசு வாங்குபவனும் ஊழல் ஒழிப்பை வரவேற்பான். வாயில் சொல்வதற்கு எந்த சிக்கலும் கிடையாது. ஊழல் ஒழிப்பு இப்படித்தான் இருக்குமேதவிர அவர்கள் எந்த பயனையும் விளைவிக்க மாட்டார்கள். அப்துல்கலாம் கூட அப்படித்தான் சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால் சமூகத்திற்கு என்ன பயன் கிடைத்தது? காந்தியாரின் படத்திற்கு நேரெதிராக சாவர்க்கரின் படத்தைக் கொஞ்சம்கூடத் தயக்கமில்லாமல் திறந்துவைத்தார். எல்லோராலும் பாராட்டப்படுகிற அல்லது யாராலும் தாக்கப்படாத ஒரு இடத்தை ஊழல் ஒழிப்பு என்பது அளிக்குமேதவிர, அது மக்களுக்கு எந்தப் பயனையும் தராது.

பார்ப்பனர்கள்கூட ஊழல் ஒழிப்பைப் பற்றிப் பேசுவார்கள். முதல் தலைமுறையாகப் பணிகளுக்குள் நுழைந்திருக்கும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களைக் குறை கூறுவதற்கு அதனைப் பயன்படுத்துவார்கள். காலம் காலமாகக் கணக்கு வழக்கு இல்லாமல் எல்லாத்துறைகளிலும் பணத்தை வாங்கிக் கொண்டிருந்தவர்கள் அவர்கள்தான். ஆனால் இப்போது அவர்கள் பலரும் ஊழல் ஒழிப்புப் பற்றிப் பேசுவார்கள். நேர்மையில் உயர்ந்த கட்சி பாஜக என்று சொல்வார்கள். ஆனால் பாஜகவின் ஊழல் இவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ! தெரிந்தும் அமைதியாக இருப்பார்கள். இது ஒரு ஜாதிய மனப்பான்மை அல்லது ஜாதிய அடிமை மனப்பான்மை. எனவே வெறும் ஊழல் ஒழிப்பால் சமூகத்திற்கு எந்தப் பயனும் இல்லை எந்த மாற்றத்தையும் இதனால் கொடுத்துவிட முடியாது என்பதுதான் என் கருத்து.

நேர்கண்டவர்: **மா.உதயகுமார்**


## நந்தனம் புத்தகக் கண்காட்சியில்

## கருஞ்சட்டைப் பதிப்பகம் (கடை எண் 147 / 148)








**Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,**